[1984 மார்ச் 5

செவிடு மற்றும் ஊமை மாணவர்களுக்கு தொழிற் பயிற்சி அளிக்கும் திட்டம்.

173—(*வினா எண் 18211) திரு. செ. செம்மலை : மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செவிடர் மற்றும் ஊமை மாணவர்களுக்குத் தொழிற் பயிற்சி அளிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) காது கேளாதோருக்கென சென்னையிலே உள்ள கிண்டி மற்றும் மதுரையிலுள்ள அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் மின் கம்பியாளர் போன்ற தொழிற் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

(ஆ) 1981 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் முதல் இந்தப் பயிற்சி நடத்தப்பட்டு வருகிறது. பயிற்சிக் காலம் 2 ஆண்டுகள். 15 முதல் 30 வயதிற்குட்பட்டுள்ள பள்ளி இறுதி ஆண்டு படிப்பு முடித்தவர்கள் சேர்க்கப்படுகின்றனர்.

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டம்.

174—(*வினா எண் 21303) திரு. டி. மணி :—மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில் தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டம் அமுல்படுத்த அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : கன்னியாகுமரி மாவட்டத்தில், தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டம் அமுல் படுத்த, தற்போது கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

நிதி நிலைக்கேற்ப, இம் மாவட்டத்தில் இந்தத் திட்டத்தை அமுல்படுத்துவதுபற்றி, நாளாவட்டத்தில் ஆய்வு செய்யப்படும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

1984 மார்ச் 5]

திரு. டி. மணி: தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலே தீவிர கால்நடைத் திட்டம் அமல்படுத்தப்பட வேண்டுமென்று சில வருடங்களாக நாங்கள் கோரிக்கையை வைத்து வருகிறோம். கால்நடைகளை வளர்க்கும் ஆர்வம் அந்தப் பகுதியிலே குறைந்துக் கொண்டே வருகின்ற நிலைமை உருவாகிவருகிறது. தரமான மாட்டுத் தீவனங்கள் வழங்கப்படாத காரணத்தினால் கருத்தரிப்பு குறைந்து கொண்டு வருகிறது. இந்தத் திட்டத்தை அமல்படுத்துவதற்கு கன்னியாகுமரி மாவட்டத்திலே இயற்கைச் சூழ்நிலைகள் சரியாக அமைந்திருக்கின்ற காரணத்தினால் இந்தத் திட்டத்தை அமல்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவர் அவர்களே, நான் பதிலிலேயே குறிப்பிட்டிருக்கிறேன். நிதி நிலைமைக்கு ஏற்ப கன்னியாகுமரி மாவட்டத்திலே அந்தத் திட்டத்தை அமல்படுத்துவதற்கு அரசு பரிசீலனை செய்யும்.

திரு. டி. மணி: தலைவர் அவர்களே, நான் என்னுடைய கோரிக்கையிலே கன்னியாகுமரி மாவட்டத்திலே கால்நடை வளர்க்கும் ஆர்வம் குறைந்து கொண்டே வருகிறது என்று குறிப்பிட்டிருக்கிறேன். குறிப்பாக குளித்தலையிலே கால்நடை பராமரிப்பு நிலையத்திலே விந்தூட்டல் ஏற்படுத்துகிற மாடுகள் பற்றாக்குறையாகவும், நோய்வாய்ப்பட்டதன் காரணமாகவும் விந்தூட்டலுக்குக் கேந்திரமான அந்தப் பகுதியிலே தரம் குறைந்து கொண்டு வருகிற நிலை இருக்கிறது. அதைக் கருத்தில் கொண்டு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து அந்த மாவட்டத்திலே தீவிர கால்நடைத் திட்டத்தை அமலாக்க நடவடிக்கை மேற்கொள்வார்களா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: எல்லாவற்றையும் பரிசீலித்து நிதிநிலைக்கு ஏற்றவாறு பரிசீலனை செய்யப்படும்.

திரு. சு. முத்துக்கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, தீவிர கால்நடைத் திட்டம் நிதிநிலைமையைப் பொறுத்து ஆரம்பிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தற்போது கன்னியாகுமரி மாவட்டத்திலே கால்நடை மருத்துவ மனையின் பணிகளைத் தீவிரமாகச் செயல் படுத்தக்கூடிய முறையிலே—அந்த ஆஸ்பத்திரியும், சப் சென்டரும் இரண்டும் ஒரே இடத்திலே சேர்ந்து இயங்கிக் கொண்டிருக்கிறது.—அவைகளை தனித்தனியாக மக்களுக்குப் பயன்படுகிற வகையிலே செயல்படுகின்ற முறையிலே இயங்கச் செய்வதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலே கேந்திர கிராமத் திட்டத்தை அமல்படுத்திக் கொண்டு வருகிறோம். மருந்தகமும், கிளை நிலையமும் ஒன்றாக இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர்

LEGISLATURE TRUTH ALONE TRIUMPHS

அவர்கள் சொன்னார்கள். ஆனால் அவை தனித் தனியாகத் தான் செயல்படுகின்றன. எந்த இடத்தில் அப்படிச் செயல்படுகிறது என்பதை உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டால் அதைத் தனித்தனியாக செயல்படச் செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு மேற் கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. உரிமைப் பிரச்சினை

‘தினமலர்’ மீது—தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவை உரிமை மீறல் குறித்த பிரச்சினை :—

21-2-1984 ஆம் நாளிட்ட சென்னைப் பதிப்பு “தினமலர்” நாளேட்டில் 4 ஆவது பக்கத்தில் ஒரு கருத்துப் படம் பிரசுரிக்கப் பட்டு இருந்தது. உறுப்பினர்கள் மனம் புண் படக்கூடிய வகையில் அக் கருத்துப்படம் பிரசுரிக்கப்பட்டிருந்தது குறித்த பிரச்சினையை 23-2-1984 ஆம் நாளன்று திரு. ஆர். கிருஷ்ணன் அவர்கள் அவையில் எழுப்பினார்கள். உறுப்பினர்கள் மனம் புண்படக் காரணமாக அந்த கார்ட்டூன் அமைந்து விட்டதற்காக ஆசிரியர் வருத்தத்தைத் தெரிவித்து, அந்த நாளிதழில் 23-2-1984 ஆம் நாள் பதிப்பின் 3 ஆம் பக்கத்தில் வெளியிடப்பட்டு இருந்தது. தவறுக்கான வருத்தத்தை முதல் பக்கத்திலே போட வேண்டும் என்று உறுப்பினர்கள் சிலர் பேரவையில் கருத்துக்களைத் தெரிவித்தனர். வருத்தத்தை முதல் பக்கத்திலேயே, போட வேண்டும் என்றும், அவர்கள் எப்படி போடுகிறார்கள் என்பதை பார்த்துவிட்டு என்னுடைய தீர்ப்பை வழங்குவதாகவும் தெரிவித்திருந்தேன்.

அந்நாளேட்டின் ஆசிரியர் தனிப்பட வருத்தம் தெரிவித்து ஒரு கடிதத்தினையும் அனுப்பியுள்ளார். அக் கடிதத்தில் பின்வருமாறு எழுதியுள்ளார். Since some of the Members of Legislature have expressed their disPleasure over the Publication of two cartoons in the issue of our daily, dated 20th and 21st of this mohth, I would like to clarify that no motive was intended b hind that Publication. Kindly accept my regret.